# மெட்ரோ ரெயிலில்

# 4284 மாணவர்கள் இலவச பயணம்!

சென்னை, ஜூலை.11— சென்னையில் ஓசைபடாமல் ஓடிக் கொண்டு இருக்கும் மெட்ரோ ரெயிலுக்கு நாளுக்கு நாள் மக்களின் ஆதரவு பெருகி வருகிறது.

பயணிகளின் நலனை மட்டுமே மனதில் கொண்டு பல்வேறு வசதிகளை செய்து வரும் மெட்ரோ நிர்வாகம் குறிப்பாக மாணவர்களுக்காக கல்விப்பயணத்தையும் அவ்வப்போது நடத்தி வருகிறது. 2018 மற்றும் 2019 ஆம் கல்வி ஆண்டில் மட்டும் 31 ஆயிரத்து 178 மாணவ – மாணவிகள் மெட்ரோ ரெயிலில் பயணித்து பலன் பெற்று வந்துள்ளனர்.

இந்தகல்விப்பயணங்கள் மாதம் தோறும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அப்போது மெட்ரோ ரெயிலின்சிறப்புஅம்சங்கள் பற்றி மாணவர்களுக்கு விளக்கப்பட்டு வருகிறது.

### கல்விப்பயணம்

— 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான கல்விப் பயணம் 2019 ஜூன் 4 மாதம் தொடங்கியது. 2019 ஜூன் மாதத்தில் மொத்தம் அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிக்கூடத்தை சேர்ந்த 4284 மாணவர்கள் இந்த கல்விப்பயணத்தை மேற்கொண்டனர்.

மேலும் மாணவர்கள் மூலம் பேரணியையும் நடத்தி அசத்தி வருகிறது. மெட்ரோரெயில்பயணத்தில் அவ்வப்போது சில சிறிய திடங்கல்கள் ஏற்பட்ட போதும் உடனே பயணிகளின்பயணம்தடை பெறாத வகையில் மாற்று ஏற்பாடுகளை மெட்ரோ ரெயில் நிர்வாகம் செய்து வருவதும்குறிப்பிடத்தக்கது.

உலக யோக தினத்தையொட்டி கடந்த ஜுன் மாதம் 21–ந் தேதி மெட்ரோ ரெயில் நிலையங்களில் 4 நாட்கள் தொடர் யோகா பயிற்சி வகுப்புகள்நடந்தன. 3வயது முதல் 80 வயது முதியவர் வரை எளிதாக பயிற்சி செய்யும் வகையில் யோகா பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பெரும் அளவில் மாணவர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

### புதிய திட்டங்கள்

சென்னை மெட்ரொ ரெயிலில்பயணஅட்டையை வாகன நிறுத்தத்திற்கு பயன்படுத்துவதற்கான வசதி மற்றும் கோயம்பேடு பணிமனையில் 12 மெகாவாட் சூரியசக்தி மின் உற்பத்தி துவக்கப்பட்டது. மற்றும் மெட்ரோ ரெயில் பயணிகள் வசதிக்காக ஷேர் டாக்ஸி மற்றும் ஷேர் ஆட்டோ சேவையும் ஆரம்பிக்கப்பட்டது.

இப்படி பயணிகள் பயணம் இனிதாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் அடுத்தடுத்து புதிய மகிழ்வித்து வருகிறது என்பது மெட்ரோ ரெயிலில் பயணம்செய்வோர்கருத்தாக உள்ளது.



மெட்ரோ ரெயிலில் இலவச பயணம் செய்த மாணவர்களை படத்தில் காணலாம்.